# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான பேருந்து நிலையத்தில் கொரோனா (Covid-19) நோய் தொற்று காரணமாக பேருந்து போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த அரசு நிபந்தனைகளுடன் பேருந்து சேவை தொடங்க அறிவித்தன் பேரில் பயனிகள் கைகளை சுத்தம் செய்ய ஏதுவாக wash basin களை அமைக்க கிளை மேலாளர் செங்கல்பட்டு பணிமனை அவர்கள் கேட்டுக்கொணடதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் உத்திரவிற்கிணங்க wash basin மற்றும் இதற்க்கான உதிரி பாகங்கள் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/– மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1134 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சியில் வரும் வடகிழக்கு பருவ மழையின் போது இரவு நேரங்களில் தேவையான பணியாளர்களை தயார் நிலையில் தங்கவைக்கவும், மழையின் போது தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்களை நிவாரண முகாம்களில் தங்கவைக்கும் போது அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் மற்றும் இதரபணிகள் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்க்கு மன்ற அனுமதிக்க வேண்டப்படுகிறது.

அ.கு–

1) மன்றம் ஏற்கலாம்.
2) தனி அலவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1135 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சி அருகில் உள்ள புறவழிச்சாலை டோல்கேட் அருகில் உள்ள இடத்தில் 2020–2021–ம் ஆண்டுக்கான தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொது மக்கள் பயன்படும் வகையில் நவீன கழிப்பிட வசதி கொண்ட மொபைல் டாய்லெட் (Mobile Toilet) அமைக்கும் பணிக்கு ரூ.1.50 இலட்சத்திற்கு பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1136 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 01.10.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உணவு மற்றும் ஆட்கள் சப்ளை செய்யும் பணி. | 3.00 | கே.வெங்கடேசலு | 0.05% குறைவு |
| | | | இ.சந்திரன் | 3.23% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் வாஷ்பேஸன் அமைக்கும் பணி | 0.50 | கே.வெங்கடேசலு | 0.02% குறைவு |
| | | | இ.சந்திரன் | 1.96% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வவைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1137 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 29.09.2020 ஆம் தேதியிட்ட கடித ந.க.எண்.8763/2020/R2, இல் கொரோனா தொற்று நோய் காரணமாக அரசு பொது ஊரடங்கு உத்தரவினை பிறப்பிக்கப்பட்ட நிலையில் எந்த விதமான பணிகளும் தமிழ்நாட்டில் நடைப்பெறாத நிலையில் இருந்தது. குறிப்பாக கடைகள் மற்றும் வரியில்லா இனங்கள் செயல்படுத்தபடாத நிலையில் இருந்ததால் 01.04.2020 முதல் 31.05.2020 வரை கீழ்க்கண்ட இனங்களுக்கு மேற்படி 2 மாதங்களுக்கான கேட்பினை தள்ளுபடி செய்து இதன் விவரத்தினை பல்வகை கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இனங்கள்**

**வருடாந்திர குத்தகை இனங்கள்**

1. பேருந்து நுழைவு கட்டணம் (அலுவலக வசூல்)
2. தினசரி காய்கறி நாளங்காடி
3. தினசரி மீன் நாளங்காடி
4. ஆடு அறுவை சாலை
5. தினசரி லாரி வேன் கட்டணம்
6. கூவி விற்போர்
7. புதிய பேருந்து கட்டணம் கழிப்பிடம்
8. திம்மாவரம் நீரேற்று நிலையம் மாமர மகசூல்
9. தசரா வசூல்
10. சமுதாய கூடம்
11. சைக்கிள் ஸ்டேன்ட் உரிமம் கட்டணம்

1. புதிய பேரூந்து நிலைய கடைகள்
2. பழைய பேருந்து நிலைய கடைகள்
3. தந்தை பெரியார் வணிக வளாக கடைகள்
4. இராஜேஸ்வரி வேதாசலம் காம்ப்ளக்ஸ்
5. அண்ணா சாலை கடைகள்
6. திருக்கழுக்குன்றம் சாலை கடைகள்
7. இரும்பு பெட்டி கடைகள்.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பல்வகை வரவின பதிவேட்டில் தொகை தள்ளுபடி விவரத்தினை பதிவு செய்யலாம்.

தீர்மானன எண்.1138 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

இந்கராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் Battery Operator Vehicle BOV 13 எண்ணிக்கையிலான வாகனங்களின் முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் Door to Door குப்பைகளை பிரித்து வாங்குவது தடைபடுகிறது. பழுதுபட்ட வாகனங்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1139 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–7

இந்கராட்சி பொது சுகாதார பிரிவில் கொசுப்புழு ஒழிப்பு வாகனம் (Vehicle mounted fogging machine) இரண்டு எண்ணிக்கை பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. தற்போது கொரோனா முடிந்து டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் இந்நகராட்சி குறுகளான மற்றும் மலைப் பகுதிகள் உள்ள பகுதிகளுக்கு பெரிய அளவிலான வாகனம் செல்ல முடியாது. என்பதாலும் இந்த வாகனங்களை பழுதுபார்க்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.0.40/– இலட்சத்திற்கு மன்றப் பொருள் வைக்க அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1140 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

இந்கராட்சி வார்டு எண்.24 G.S.T Road, TKM Road பகுதிகளுக்கு செல்லும் குடிநீர் பகிர்மான குழாய் உடைப்புகள் ஏற்பட்டு 15 ஆண்டுகள் அந்த பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டு லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது G.S.T Road யை துண்டிப்பு செய்ய நெடுஞ்சாலை துறை வாய்மொழி உத்தரவு பெற்று குடிநீர் பகிர்மான குழாய் சரி செய்யப்பட்டு துண்டிப்பு செய்த சாலையை சரி செய்து கொடுக்கப்பட்டது. செலவினத் தொகை ரூ.1.47/– இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானன எண்.1141 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–9

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பிரிவில் வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு நோய் தடுப்பு சம்பந்தமாக பல முன்னேற்பாடுகளை செய்து வார்டுகளில் கீழ்கண்ட அத்தியாவசிய பொருட்கள் ரூபாய் 9.00 இலட்சத்திற்கு Bleaching powder, Lysol ,Slacked Lime Powder ,Black Phenyl ,1 வைஅந ரளந அயளம தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் நகராட்சிளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் குறுகிய கால விலைப்புள்ளி மூலம் பெறப்பட்டு பயன்படுத்த பட்டதற்கு உண்டான பில் தொகையினை திரு.மு. ராஜகோபாலன் நகராட்சி ஒப்பந்ததாரர் என்பருக்கு வழங்கபட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | திரு.K. ராஜகோபாலன், செங்கல்பட்டு | திரு.A. மோகன், செங்கல்பட்டு | மெஸ்ஸர்ஸ் அப்பல்லோ எண்டர்பிரைசஸ் , மறைமலைநகர் |
| 1 | Bleaching powder 1Kg | 53 | 55 | 60 |
| 2 | Lysol 1 liters | 124 | 127 | 130 |
| 3 | Slacked Lime Powder 1kg | 15 | 17 | 20 |
| 4 | Black Phenyl 1 litres | 110 | 120 | 125 |
| 5 | 1 time use mask 1No | 9 | 12 | 15 |
| | Add GST – 18% | | | |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. K. ராஜகோபாலன், ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு–

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.1142 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–10

செங்கல்பட்டு நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவில் வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள வேண்டிய கட்டாய

சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் கீழ்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்கி வழங்கிட வேண்டப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | Mask | 10000 Nos |
| 2 | Lyzol | 2000 Ltrs |
| 3 | Bleaching Powder | 5000 Kgs |
| 4 | Lime Powder | 5000 Kgs |
| 5 | Black Phenyl | 600 Ltrs |

மேலும், இப்பணிகளை ஒப்பந்த புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில் அவசர அவசியம் கருதி **1920** ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டபிரிவு **15–**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மற்றும் சப்ளை செய்யும் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.**9.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.**1143** நாள்.**29.10.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–11**

செங்கல்பட்டு நகராட்சி அருகில் உள்ள புறவழிச்சாலை டோல்கேட் அருகில் உள்ள இடத்தில் தீபாவளியை முன்னிட்டு பொது மக்கள் பயன்படும் வகையில் மொபைல் டாய்லேட் (Toilet Mobile) அமைக்கும் பணிக்கு 12 எண்ணிக்கையிலான (6 ஆண்கள் + 6 பெண்கள்) டாய்லேட் தற்காலிக வாடகை அடிப்படையில் அமைக்க மதிப்பீடு ரூ.**2.75** இலட்சம் ஆகும். நகராட்சியின் பொது நிதியில் மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது சுகாதார பிரிவில் அவசியம் கருதி மேற்கொண்ட நடவடிக்கைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3626/2019/இ1**

தீர்மானன எண்.**1144** நாள்.**29.10.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–12**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட புறவழி சாலையில் உள்ள டோல் கேட் அருகில் தீபாவளி பண்டிகைக்கு Mobile toilet பொது மக்களுக்கு பயன்படும் வகையில் அமைக்க **22.10.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி Tollgate பகுதியில் தீபாவளி பண்டிக்கைக்கு பொது மக்கள் பயன்பாட்டிற்காக தற்காலிக கழிவறை அமைக்கும் பணி | ரூ.2.75 இலட்சம் | S.K.Sanitaz (மதிப்பீட்டு விலை) |
| | | | Leo polymers & Enterprices 0.25% அதிகம் |

குறைவாக மதிப்பீட்டு விலைக்கே வழங்கிய M/S S.K Sanitaz நிறுவனத்திற்கு முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3626/2019/இ1**

தீர்மானன எண்.1145 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–13

செங்கல்பட்டு நகராட்சியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 21.10.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சியில் இயங்கிவரும் கணிப்பொறிகளுக்குண்டான UPS Nos (16)Drycell Battery மற்றும் Nos (5) 1 KV UPS வாங்கும் பணி | 2.50 | Incom Solution, | ரூ.0.01% குறைவு |
| | | | SRT Date Solution | ரூ.2.07% அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1146 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–14

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசு ஒழிப்பு (DBC) பணி மேற்கொள்ள போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் வெளி கொணர்வு முறையில் (Out sourcing) ஆட்கள் நியமித்து பணி நடைபெற்று வரப்படுகிறது. தற்போது ஆட்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் வரும் 10.11.2020 உடன் முடிவடைவதால் தற்போதுள்ள கொரோனா காலம் மற்றும் வரும் மழைக் காலத்தில் பரவும் டெங்கு போன்ற கொசும் புழு பரவுதலை தடுக்க DBC பணியாளர்கள் தேவைப்படுகிறது.

எனவே நகராட்சி முழுவதும் பணியாற்ற தேவையான 70 எண்ணிக்கையினை பணியாளர்கள் வெளிக் கொர்ணவு முறையில் மாவட்ட ஆட்சி தலைவரின் ஆட்கள் விலைவிகித பட்டியலின் விலைக்கு ஆட்கள் மூன்று மாதங்கள் வைத்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற பொருள் வைக்கப்பகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1147 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–15

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 29.10.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதார பிரிவில் உள்ள பழுததடந்த BOV (Battery Operator Vehicle) பழுது பார்த்தல் பணி. | 4.50 | Shree Bhairava Green Lines | 0.01% குறைவு |
| | | | Shri Vaari EnnerÁises | 1.05% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதார பிரிவில் உள்ள கொசுபுழு ஒழிப்பு புகை அடிக்கும் வாகனம் (2 எண்ணிக்கை) பழுது பார்த்தல் பணி. | 0.40 | Im Sakthi Tech Services | 0.01% குறைவு |
| | | | Sakthi Industriees | 1.20% அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

குறைவு ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1148 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–16

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய செல்லும் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் உடைப்பை சரிசெய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1075 நாள்.31.03.2020–ன் படி இவ்வலுவலக செயல்முறையில் ந.க.எண்.21/2020/இ2, நாள்.01.04.2020–ன் படி அப்போலோ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு மதிப்பீடு 9.00 இலட்சத்திற்க்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஆண்டு பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

தற்போது இத்தொகை அக்டோபர் 2020 மாதத்துடன் முடிவதால் வருடம் ஐந்து மாதங்களுக்கு பராமரிப்பு செய்ய திட்ட ஒதுக்கீடு தொகை இல்லாததாலும், இந்நகராட்சி மிகப்பழைமையான நகராட்சியாதலால் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாவதால் அடிக்கடி அங்காங்கே அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குவது அவசியமாகிறது.

எனவே, பொதுமக்களின் குடிநீர் அவசரஅவசியத்தை முன்னிட்டு அடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை வரும் ஐந்து மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிற்கும் இப்பணியினை மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்திற்கு செய்ய மன்ற ஒப்புதலுக்கு.

ந.க.எண்.0336/2020/இ2

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1149 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–17

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.3) துறை அரசு ஆணை எண்.170 நாள்.27.10.2020 குறிப்பீட்டுள்ள படி நகர்புற பகுதிகளில் வறுமை கோட்டிற்க்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கு எடுபதற்க்கு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கணினி பதிவு ஏற்றத்தின் படி 5455 குடும்பங்களின் விவரங்களை படிவம் அச்சடித்து (Pre Populated form) தகவல் சேகரிப்பு பணி மற்றும் தகவல்களை இணையதளத்தில் பதிவு ஏற்றம் செய்வதற்க்கும் மற்றும் தோராய செலவினம் ரூ.0.85 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வழங்க ஒப்புதலுக்கு.

அ.கு–

அனுமதி அளிக்கலாம்.

தீர்மானன எண்.1150 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–18

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நிரந்தர மழைநீர் கால்வாய் மற்றும் மண் கால்வாய்கள் சுத்தப்படுத்தவும் அகற்றப்படும் மண்ணை அப்புறப்படுத்தவும் தேவையான மண்வாரி எந்திரம் லாரி மற்றும் தேவையான ஆட்கள் வைத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றம் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1151 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–19

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20–ல் ரேடியோ மலை நீர்தேக்க தொட்டி அருகில் CSR திட்டத்தின் மூலம் புதியதாக அமைக்கப்பட உள்ள Water ATM–க்கு குடிநீர் ஆதாரம் செய்து கொடுக்க புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட வேண்டி உள்ள பணிக்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் மன்றப் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணி நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மானன எண்.1152 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–20

செங்கல்பட்டு நகராட்சி அலுவலக பழைய கட்டிடத்தில் தற்போது பொது சுகாதார பிரிவு, மற்றும் தனி தாசில்தார் அலுவலகம் இயங்கி வருகிறது. பழைய கட்டிடம் என்பதால் மின் இணைப்பு மற்றும் சில பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு ரூ.3.40/– இலட்சம் மன்றப் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானன எண்.1153 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–21

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் அவ்வப்போது பழுது ஏற்படும் உபகரணங்களை பழுதுபார்கவும் மின்விளக்கு மற்றும் இதர பணிகள் செய்ய பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் மன்றப் பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

Ô®khdd v©.1154 ehŸ.29.10.2020

mDkÂ¡f¥g£lJ.

பொருள்–22

பொது சுகாதாரம் செங்கல்பட்டு நகராட்சி தினசரி குப்பைகள் அள்ள இயங்கி வரும் ஐந்து TATA ACE மற்றும் ABC வாகனம் ஒன்று டயர்கள் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் ஆக மொத்தம் 6 வாகனங்களுக்கு புதிய டயர்கள் வாங்கி பொறுத்தும் பணி தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அவசர பணியாக மேற்கொள்ள உத்தரவு வழங்குதல் சார்ந்தது

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | அம்பிகா டயர்ஸ், நெ.93,1–ஏ, ஜி.எஸ்.டி ரோடு செங்கல்பட்டு– 603 001 | முந்த்ரா டயர்ஸ், நெ.75,ஜி.எஸ்.டி ரோடு, மதுராந்தகம்– 603306 | வலம் டயர்ஸ்,நெ.210&211,ஊரப்பாக்கம்–603210 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | TATA ACE மற்றும் ABC வாகனம் டயர்கள் பழுதாகி உள்ளதால் புதிய டயர்கள் வாங்கி பொறுத்துதல் பணி | 64800/- | 67200/- | 70800/- |
| | **விலைப்புள்ளி விகிதம்** | **குறைவு** | **அதிகம்** | **அதிகம்** |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. அம்பிகா டயர்ஸ், ஒப்பபந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு–

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.1155 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–23

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 01.10.2018 முதல் 30.09.2021 வரை மூன்றாண்டுகளுக்கு திருமதி.J.ராணி என்பவருக்கு வழங்கப்பட்டது. எனவே கீழ்காணும் விவரப்படி இவ்வாண்டிற்கான குத்தகை உரிமம் 01.10.2020 முதல் 30.09.2021 வரை திருமதி.J.ராணி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

1) 01.10.2018 முதல் 30.09.2021 வரை குத்தகை தொகை ரூ. 9,72,000/–

2) முதலாம் ஆண்டு குத்தகை தொகை ரூ. 9,72,000/–

மேற்படி தொகையில் 5% சதவீதம் உயர்வு செய்த தொகை ரூ. 48,600/–

–––––––

01.10.2019 முதல் 30.09.2020 வரை குத்தகை தொகை ரூ. 10,20,600/–

––––––––

3) இரண்டாம் ஆண்டு குத்தகை ரூ. 10,20,600/–

5% சதவீதம் உயர்வு செய்த தொகை ரூ. 51,030/–

––––––––

01.10.2020 முதல் 30.09.2020 வரை மூன்றாம் ஆண்டு குத்தகை தொகை ரூ. 10,71,630/–

––––––––

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

மேற்படி குத்தகை இனத்தின் உரிமம் இவ் மூன்றாண்டுகள் முடிவடைகிறது என்பதால் குத்தகைதாரர் அளித்த சம்மதக்கடித்தின் படி 01.10.2020 முதல் 30.09.2021 வரை தினசரி காய்கறி நாாளங்காடியில் கட்டணம் வசூலிப்பதற்காக திருமதி.J.ராணி குத்தகைதாரருக்கு புதுபித்து உரிமம் வழங்கலாம். அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குத்தகை உரிமம் வழங்க மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1156 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–24

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–20–ம் நிதியாண்டின் 14–வது நிதிக் குழு மாண்ய நிதி (14th CFC) திட்டத்தின் கீழ் ரூ.240.00 இலட்சத்திற்க்கு எட்டு பணிகள் செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.999 மற்றும் 1000 நாள்.06.01.2020 ன் படி பணிகள் தேர்வு செய்யப்பட்டு இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.7/இ/2020, நாள்.08.01.2020 ன் படி 28.01.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதன் படி குறைவு ஒப்பந்தபுள்ளி தாரருக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7/2020/இ1, நாள்.04.02.2020 ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதில் மேற்கண்ட நகர்மன்ற தீர்மானம் எண்.999 நாள்.06.01.2020 ன் படி வரிசை எண்.2–ல் வார்டு எண்.16–ல் அழகேசன் சாலை தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.18.00 இலட்சத்திற்கு 268 மீட்டர் நீளத்திற்கு 5.00 மீட்டர் அகலத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இச்சாலை மழைக்காலங்களில் மழைநீர் தேக்கமடைந்து பொது மக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக இருந்ததை தள ஆய்வு செய்த போது நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளரின் அறிவுரைக்கேற்ப்ப GSB மற்றும் Wetmix கொண்டு சாலையை உயர்த்தி அமைக்கும் வண்ணம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

தற்போது பணி செய்ய ஆரம்பிக்கும் போது இப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் இச்சாலையை உயர்த்தி அமைத்தால் வீடு மிகவும் தாழ்வாக ஆகிவிடும் எனவே சாலையினை மேலும் உயர்த்தாமல் தார் தளம் மட்டும் அமைக்குமாறு கேட்டுக்கொண்டதால், ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரின் அறிவுரைக்கேற்ப்ப இம்மதிப்பீட்டில் உள்ளவாறு அழகேசன் சாலையின் ஒரு பகுதி மட்டும் உயர்த்தி செய்யவும் பழுதடைந்த மிகுதி பகுதி சாலையை பழுது பார்த்து (B.T.patch work) செய்து தார்தளம் மட்டும் அமைக்க (B.M and SDPC)வும் மொத்தம் 328 மீட்டருக்கு தார் சாலை புதுப்பிக்கவும் அனுமதிக்காக.

மேலும் இம்மாறுதல் செய்வதால் இனவாரி (Item wise) மாறுதல் செய்தாலும் திட்ட மதிப்பீடு தொகைக்குள் பணி செய்வதால் இம்மாறுதல் செய்து பணி செய்ய அனுமதிக்காக.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி செய்ததை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1157 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–25

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–20–ம் நிதியாண்டின் 14–வது நிதிக் குழு மாண்ய நிதி (14th CFC) திட்டத்தின் கீழ் ரூ.240.00 இலட்சத்திற்க்கு எட்டு பணிகள் செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.999 மற்றும் 1000 நாள்.06.01.2020 ன் படி பணிகள் தேர்வு செய்யப்பட்டு இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.7/இ/2020, நாள்.08.01.2020 ன் படி 28.01.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதன் படி குறைவு ஒப்பந்தபுள்ளி தாரருக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7/2020/இ1, நாள்.04.02.2020 ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதில் மேற்கண்ட நகர்மன்ற தீர்மானம் எண்.999 நாள்.06.01.2020 ன் படி வரிசை எண்.2–ல் வார்டு எண்.16–ல் தேவதாஸ் தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இக்சாலை மழைக்காலங்களில் மழைநீர் தேக்கமடைந்து பொது மக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக இருந்ததை தள ஆய்வு செய்த போது நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளரின் அறிவுரைக்கேற்ப்ப GSB மற்றும் Wetmix கொண்டு 175.00 மீட்டர் நீளம் மற்றும் 5.00 மீட்டர் அகலத்திற்க்கு சாலையை உயர்த்தி அமைக்கும் வண்ணம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

இச்சாலையில் மருத்துவமனைகள் மற்றும் வங்கிகளுக்கு செல்லும் முக்கிய சாலையாக உள்ளதால் சாலையின் 160.00 மீட்டர் நீளம் 5.50 மீட்டர் அகலத்திற்க்கு அமைத்து தருமாறு பொதுமக்கள் மற்றும் முன்னாள் நகர் மன்ற பிரதிநிதிகள் கோரிய தன் பேரில் சாலையினை 5.50 மீட்டர் அகலத்திற்கு செய்ய தெரிவித்ததன் பேரில் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரின் அறிவுரைக்கேற்ப்ப இம்மாறுதல் செய்வதால் திட்ட மதிப்பீடு தொகைக்குள் செலவினம் மேற்கொள்ளலாம் ஆகையால் இம்மாறுதல் செய்து பணி செய்ய அனுமதிக்காக.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி செய்ததை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானன எண்.1158 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–26

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று அதிகமாக தாக்கா வண்ணம் கொரோனா தடுப்பு மருந்துடன் கலந்து தெளிக்கும் மருந்து 50 லிட்டர் என அவசர அவசியமாக ரூ1.80 இலட்சத்திற்கு செலவிட்டு விலைப்புள்ளி கோரி பெற்று குறைந்த விலைபுள்ளி ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

Ô®khdd v©.1159 ehŸ.29.10.2020
mDkÂ¡f¥g£lJ.

பொருள்–27

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு சம்பந்தமாக பல முன்னேற்பாடுகளை செய்து வார்டுகளில் தற்போது தேவையான தண்ணீருடன் கலந்து தெளிக்கபடும் கொரோனா தடுப்பு மருந்து (தெளிப்பானாக பயன்படுத்தப்படும்) ECO CLEAN 50 PLUS DISINFECTANT போன்றவை நகராட்சிளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் குறுகிய கால விலைப்புள்ளி மூலம் பெறப்பட்டு பயன்படுத்த பட்டதற்கு உண்டான பில் தொகையினை திரு. **ஸ்ரீ சக்தி ஏஜென்சி,** என்பருக்கு வழங்கபட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | ஸ்ரீ சக்தி ஏஜென்சி, தமிழ் குடில், நெ.44/3, கணபதி நகர் மெயின் ரோடு, கணபதி நகர், ஈரோடு–638 011 | பிரமிடு பிராசசிங்க மில்ஸ், நெ.013/1,í, bt£L¡f£L வலசு, நாசியனுர் ரோடு, ஈரோடு–638 011 | எஸ்.ஆர். டிரேடர்ஸ், நெ.57, மாதவா காடு, திருநகர் காலனி, ஈரோடு–638 003 |
| 1 | ECO CLEAN 50 PLUS – DISINFECTANT | லிட்டர் ஒன்றுக்கு 3010/– | லிட்டர் ஒன்றுக்கு 3860/– | லிட்டர் ஒன்றுக்கு 4110/– |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஸ்ரீ சக்தி ஏஜென்சி, ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழுங்கலாம்.

அ.கு–

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.1160 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–28

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு சம்பந்தமாக பல முன்னேற்பாடுகளை செய்து வார்டுகளில் கீழ்கண்ட அத்தியாவசிய பொருட்கள் (நீர்த்த சுண்ணாம்பு , பிளீச்சிங் பவுடர்) தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் நகராட்சிளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் குறுகிய கால விலைப்புள்ளி மூலம் பெறப்பட்டு பயன்படுத்த பட்டதற்கு உண்டான பில் தொகையினை திரு.K. மாரிமுத்து நகராட்சி ஒப்பந்ததாரர் என்பருக்கு வழங்கபட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | K. மாரிமுத்து நகராட்சி ஒப்பந்ததாரர் மற்றும் பொருட்கள் விநியோகிப்பவர் கடலூர் | T.சேஷாத்ரி கிளாஸ் 1 ஒப்பந்ததாரர் கடலூர் | P. பர்குணன் நகராட்சி ஒப்பந்ததாரர் கடலூர் |
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | கிலோ ஒன்றுக்கு 10/– | கிலோ ஒன்றுக்கு 11.50/– | கிலோ ஒன்றுக்கு 11.50/– |
| 2 | பிளீச்சிங் பவுடர் | கிலோ ஒன்றுக்கு 47/– | கிலோ ஒன்றுக்கு 50/– | கிலோ ஒன்றுக்கு 50/– |
| 3 | லைசால் | கிலோ ஒன்றுக்கு 130/– | கிலோ ஒன்றுக்கு 140/– | கிலோ ஒன்றுக்கு 150/– |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. K.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

<u>அ.கு–</u>

மேற்படி செலவினம் அவசர அவசியத்தின் நிமித்தம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 15–ன் கீழ் செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானன எண்.1161 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–29

இந்நகராட்சி பணியாளர்களுக்கு அனைத்து பிரிவிற்கும் தேவையான எழுதுப்பொருள் (ம) பதிவேடுகள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி சப்ளை செய்ய பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் அதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது இதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | No | ஜார்ஜ் டவுன் பலநோக்கு தொழில் கூட்டுறவு சங்கம் | PK Forms MGR Nagar Chennai | அன்னை சிவகாமி மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | A4 paper | 1 | 375.00 | 390.00 | 385.00 |
| 2 | Legal paper | 1 | 475.00 | 490.00 | 485.00 |
| 3 | File pad | 1 | 98.00 | 100.00 | 99.00 |
| 4 | Recipt (1+1) 70 gsm | 1 | 3.15.00 | 3.75.00 | 3.35.00 |
| 5 | Advance Register | 1 | 500.00 | 510.00 | 505.00 |
| 6 | Gum battle | 1 | 50.00 | 53.00 | 53.00 |
| 7 | Stapler big | 1 | 190.00 | 197.00 | 195.00 |
| 8 | Numbering muchine | 1 | 1200.00 | 1209.00 | 1205.00 |
| 9 | B.C Dairy | | 500.00 | 509.00 | 509.00 |
| 10 | Pen | 1 | 15.00 | 18.00 | 17.00 |
| 11 | Colour Fley | 1 | 50.00 | 57.00 | 55.00 |
| 12 | Wrapper sheet | 1 | 10.00 | 13.00 | 12.00 |
| 13 | ML Register | 1 | 500.00 | 507.00 | 505.00 |
| 14 | New HP toner 12 A | 1 | 6500.00 | 6515.00 | 6510.00 |
| 15 | Mouse on Keyboard | 1 | 3500.00 | 3515.00 | 3510.00 |
| மொத்தம் | | | **13966.15** | **14086.75** | **14044.35** |

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி வ.எண் 1–ல் உள்ள ஜார்ஜ் டவுன் பலநோக்கு தொழில் கூட்டுறவு சங்கம் சென்னை–1 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியத்தினிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

தீர்மானன எண்.1162 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–30**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுத் தெருவில் இயங்கி வந்த நடைபாதை மற்றும் மொத்த கொள்முதல் காய்கறி கடைகள் அனைத்தும் கொரோனா (Covid-19) நோய் தொற்று பரவுவதை தடுக்கும் விதமாக சமூக இடைவெளியை கடைபிடிக்க ஏதுவாக செங்கல்பட்டு புறவழிச்சாலை (By pass) பழவேலியில் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

மேற்படி இடம் தனியாருக்கு சொந்தமான இடமாதலால் நில உரிமைதான் காலி செய்து கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கோட்டாட்சியரிடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து இந்த இடத்தை காலி செய்து நகராட்சிக்கு சொந்தமான ஏற்கெனவே இயங்கி வந்த பகுதிக்கு அருகில் உள்ள பழைய பயணியர் விடுதி வளாகத்தில் அமைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

பழைய பயணியர் விடுதி வளாகம் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்ததால் முட்புதர்களும் கட்டிட கழிவுகளும் கொட்டப்பட்டு பாழடைந்த நிலையில் உள்ள பகுதியை மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் செங்கல்பட்டு நேரடியாக ஆய்வு செய்து இப்பகுதியை சுத்தப்படுத்தி காய்கறி கடைகள் வைக்க ஏதுவாக அமைத்துதர அறிவுறுத்தியதன் பேரில் அதற்க்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு பணி செய்து முடிக்கலாம் ஒப்புதலுக்காக.

பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்து முடிக்க உத்திரவிட்டதன் பேரில் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் இப்பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்ய அனுமதிக்காக.

**அ.கு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானன எண்.1163 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–31**

செங்கல்பட்டு நகராட்சி பழவேலி மைதானம் பகுதியில் மொத்த காய்கறி கடைகள் மற்றும் தினசரி காய்கறி கடைகளுக்கு வந்து போகும் பொது மக்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் அடிப்படை வசதியான கழிப்பிட வசதி செய்து தரவேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு

மாவட்டம் அவர்களின் உத்திரவின் பேரில் தற்காலிக கழிப்பிடம் (Bubix Toilet) மற்றும் இதர வசதிகள் செய்து தர ரூ.3.00 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் மற்றும் கொரோனா 19–தடுப்பு நடவடிக்கையாக இப்பணி செய்ய வேண்டியுள்ளதால் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் இப்பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பார்வைக்கும் பதிவிற்க்கும்.

அ.கு–

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானன எண்.1164 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–32

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் தினசரி குப்பைகளை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று TATA ACE வாகனங்கள் (1) TN 19 AK 6781 (2) TN 19 AK 6729 (3) TN 19 AK 6703 காப்பீட்டு தொகை ரூ.70,596 (2000,2001–க்கான Insurance) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதார வாகனங்கள் என்பதால் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானன எண்.1165 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–33

செங்கல்பட்டு நகராட்சி – பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவின் பேரில் போர்கால அடிப்படையில் நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கீழ் கண்டுள்ள படிவங்கள் உடனடியாக தேவைப்படுவதால் அதனை அரசு பதிவு பெற்ற உள்ளூர் அச்சகத்திலிருந்து நகல் எடுத்து பயன்படுத்தப்பட்டமைக்கு உண்டான தொகை 27,430/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. நகல் எடுக்கப்பட்ட படிவங்கள் மற்றும் எண்ணிக்கைகள்

1. KMR specimen Referal for Covid-19 (SARS-COV2) - 4000 Nos
2. டெங்கு காய்ச்சல் மஸ்தூரர்கள் தினசரி பணி அளவீட்டு பதிவேடு - 5000 Nos
3. ODF Declaration Form - 430 Nos

| வ.எண் | பொருளின் விவரம் | Qty | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|---|
| | | | **Vedagiri J Vedhaa Enterprises 1-B Gundur Church Road,Chengalpattu-603001** | **Siva Subramanium Browsing Centre,7/6,C.N Mahadevan street,Chengalpattu-603001** | **SM Consultancy,214A, Bharathi Street, Kannapettai, Chengalpattu – 603111.** |
| | | | **Amt** | **Amt** | **Amt** |
| 1 | KMR specimen Referal for Covid – 19 (SARS-COV2) மற்றும் டெங்கு காய்ச்சல் மஸ்தூர்கள் தினசரி அளவீட்டு பதிவேடு நகல்கள் (18,000 எண்ணிக்கை) One sided Copies(ODF ) | 18000<br>430 | 27430 | 36430 | 31930 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு. வேதா எண்டர்பிரைசஸ்** ஒப்பபந்ததாரர் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

அ.கு–

1. மன்றம் அளிக்கவும்.
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரீக்கலாம்.

தீர்மானன எண்.1166 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–34

செங்கல்பட்டு நகராட்சி – பொது சுகாதாரம் பிரிவல் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் பணிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்அவர்களின் உத்தரவின் பேரில் போர்காலஅடிப்படையில் நடை பெற்று வருகிறது இந்நிலையில் பொது மக்களுக்கு இந்நோயைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கீழ் கண்டுள்ள படிவங்கள் உடனடியாக தேவைப்படுவதால் அதனை அரசு பதிவு பெற்ற உள்ளூர் அச்சகத்திலிருந்து நகல் எடுத்து பயன்படுத்தப்பட்டமைக்கு உண்டான தொகை ரூ.27,430/– ஐ நகராட்சிகளின் சட்டம் 1920ன் கீழ் பிரிவு 15ன் கீழ் இச்செலவினத்தை மேற்கொள்ளலாம்.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சிகளின் சட்டம் 1920ன் கீழ் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும்.

தீர்மானன எண்.1167 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–35

செங்கல்பட்டு நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2377/2015/சி1)

அ.கு–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

தீர்மானன எண்.1168 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–36

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற (தனி) தொகுதி மேம்பாடு (2019–20) திட்டன் கீழ் 17 பணிகள் செய்ய ரூ.67.00 இலட்சம் மாவட்டம் ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4537/2019/அ3, நாள்.14.11.2019–ன் படி உத்திரவிடப்பட்டது.

இதில் முதல் தவனைத் தொகையாக ரூரூ33.50 இலட்சம் இந்நகராட்சிக்கு விடுவிக்கப்பட்டது. மொத்தமுள்ள 17–பணிகளில் 8 பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டதற்க்கு பட்டியில் தொகை ரூ.33.50 இலட்சம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. கீழ்கண்ட விவரப்படியான பணிகள் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.11.40 இலட்சம் வழங்கப்படாமல் உள்ளது. திட்ட ஒதுக்கீடு தொகை விடுவிக்க காலதாமதம் ஆவதால் இத்தொகையினை நகராட்சி நிதியில் வழங்கவும் திட்ட ஒதுக்கீட்டுத் தொகை இந்நகராட்சிக்கு விடுவிக்கப்படும் போது நகராட்சி நிதியில் ஈடுசெய்யலாம் மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | பட்டியல் தொகை (இலட்சம்) |
|---|---|---|
| 1 | வார்டு.8 கெங்கையம்மன் கோயில் தெருவில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.00 |
| 2 | வார்டு.30 ராயல் சிட்டிக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 5.00 |
| 3 | வார்டு.2 சமுதாய கூட கூடுதல் கட்டிடம் கட்டும் பணி (6.50 – 5.60 = 0.09) | 0.90 |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு எண்.26 பாரதியார் தெருவில் ஆழ்துளை கிணறு, மின்விசைப்பம்பு குடிநீர் தொட்டி அமைத்தல் | 3.50 |
| | மொத்தம் | 11.40 |

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானன எண்.1169 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–37

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் பாதிக்கப்பட்டுள்ள வீடுகள், மற்றும் தெருக்களில் தடுப்பு வேலிகள், மற்றும் பழவேலி வைகை மஹால் திடலில் தற்காலிக காய்கறி கடைகள் அமைக்கவும் பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு செய்யப்பட்டுள்ளது. பணியை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–
மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1170 நாள்.29.10.2020
அனுமதிக்கப்பட்டது.

பொருள்–38

செங்கல்பட்டு நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு தனியார் டாட்டா ஏசி வாகனம் வாடகை அடிப்படையில் பொது மக்களுக்கு காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வினியோகம் செய்ய பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. பணியை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1171 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–39

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமையில் உள்ள பொது மக்களுக்கு தனியார் வாகனம் டாட்டா ஏசி வாடகை வாகனம் மூலம் காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வினியோகம் செய்ய செலவு ரூ.7,33,200 பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணியை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1172 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–40

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் உள்ள முகாமில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு குடிநீர் கேன்(water cane) சப்ளைசெய்யும் பணிக்கு செலவு பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டமைக்கு மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1173 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–41

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரை பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் கொரோனா தொற்று நோய் மற்றும் காய்ச்சல் கண்டறிய அனைத்து இடங்களிலும் மருத்துவ முகாம்கள் அமைக்க மருத்துவர்கள் செவிலியர்கள் அமர்ந்து பணியை மேற்கொள்ள துணி பந்தல், மேஜை, நாற்காலி, குடிநீர் மற்றும் உணவு வசதிகள் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணியை மேற்கொண்ட திருவாளர் ஜெகதிஸ் அவர்களுக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1174 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–42

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோயினால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள வீடுகள், தெருக்கள் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக (Containment zone) தடுப்பு வெளிகள் மற்றும் காவல் துறையினர் இரவு பகல் கண்காணிப்பு பணியில் ஈடுபட ஏதுவாக துணிபந்தல், மேசை, நாற்காலி, விளக்கு வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க செலவு ரூ.7.70 இலட்சத்திற்கு பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டமைக்கும் பணி செய்து கொடுத்த நகராட்சி ஒப்பந்ததாரர் N. கெங்காதரன் அவர்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1175 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–43

செங்கல்பட்டு நகராட்சி பகுதிகளில் உள்ள வெளி மாநில தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு செல்ல செங்கல்பட்டு இரயில்வே நிலையத்தில் முன்புறம் மைக்செட், மேசை, சேர்,

விளக்கு வசதிகள் செய்ய தோராய செலவு ரூ.0.70 இலட்சம் பணி செய்து கொடுத்த திரு.ஜெகதீஸ் அவர்களுக்கு பட்டியல் தொகை வழங்கவும் பணிகள் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1176 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–44

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் (Covid - 19) கொரோனா நோய் தாக்குதலுடன் சிலர் கண்டறியப்பட்டுள்ளதால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் படி பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்களை வீட்டுக்கு வீடு காய்கறி கொண்டு சேர்க்க தனியார் வாகனம் வாடகை அடிப்படையில் உள்ள வாகனம் முன்பு காய்கறி கொண்டு செல்லும் வாகனம் என்று அறியும் வண்ணம் விளம்பர பதாகை வாகனங்களில் பொருத்த 33 எண்ணிக்கை பேனர்களுக்கு உத்தேசமான செலவினம் ரூ.1.50 இலட்சம் இப்பணியை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் முடிக்கப்பட்டுள்ளது. பணியினை முடித்து கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.N.கெங்காதரன் அவர்களுக்கு பட்டியல் தொகை வழங்குவதற்க்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1177 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–45

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்க தனியார் டிராக்டர் மூலமாக கிருமி நாசினி (Disinfectant solution) தெளிக்க பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. பணியை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1178 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–46

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் பேருந்து நிலையங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனா (Covid-19) பரவுவதை தடுக்கும் பொருட்டு விழிப்புணர்வு முககவசம் அனிந்திருக்கும் ஸ்டிக்கர் 2000 எண்ணிக்கை அடித்து தர தோராய செலவு ரூ.1,06,500/– பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.491/எச்1/2020

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானன எண்.1179 நாள்.29.10.2020

அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்

செங்கல்பட்டு நகராட்சி